அம்பிசாஸ்திரியின் கீர்த்தனைகள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண்.261

அம்பிசாஸ்திரியின் கீர்த்தனைகள்

பதிப்பாசிரியர்கள்:
ஸ்ரீவாஞ்சியம் **கீ. இராமச்சந்திர ஐயர்** சங்கீத வித்வான்
ஒய்வுபெற்ற இசைப்பேராசிரியர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

எஸ். சுவாமிநாத சாஸ்திரி, சிரோமணி
ஒய்வுபெற்ற வடமொழிப்பேராசிரியர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்,
தஞ்சாவூர்.

2017] [விலை ரூ.90-00

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	அம்பிசாஸ்திரியின் கீர்த்தனைகள்
பதிப்பாசிரியர்கள்	:	கீ. இராமச்சந்திர ஐயர், எஸ். சுவாமிநாதசாஸ்திரி
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
வெளியீட்டு எண்	:	261
மொழி	:	சம்ஸ்கிருதம் & தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2017
தாள்	:	TNPL. 18.6 கி.கி.
நூல் அளவு	:	21 x 14 செ. மீ
பக்கங்கள்	:	136
படிகள்	:	500
எழுத்து	:	16 &12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	இசைநூல்
விலை	:	ரூ. 90.00

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் தமிழ், சம்ஸ்க்ருதம், தெலுங்கு மற்றும் மராட்டி மொழிகளில் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட சுவடிகளைப் பாதுகாத்து வருகின்றது. மேலும் இவற்றில் வெளிவராத அரிய சுவடிகளை மொழிப்பண்டிதர்கள், துறை வல்லுநர்கள் மற்றும் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களை நியமித்து அவர்களைக்கொண்டு நூல்களாகப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் அம்பி சாஸ்திரியின் கீர்த்தனைகள் என்னும் இந்நூல் தற்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளியிடப் படுகிறது.

அம்பி சாஸ்திரிகள் அம்பலவாணரிடம் பக்தி கொண்டு சிதம்பரத்தின் தல வரலாற்றினை இசை வடிவில் நூலாக இயற்றியுள்ளார். அவர்தம் சுவடித் தொகையில் முழுமையாக அமையாமையின் காரணமாக, கிடைத்த பாடல்களை மட்டும் தொகுத்து இந்நூல் வெளியிடப்படுகிறது. இந்நூலில் வடமொழி கீர்த்தனங்களும், அதன் தமிழ் மொழி எழுத்து வரிவடிவமும், பொருளும் ஸ்வர சாகித்தியத்துடன் காணப்படுகிறது. சிறந்த இந்த இசை நூலை அறிதின் முயன்று வெளிக்கொண்டு வந்துள்ள பதிப்பாசிரியர்கள் ஸ்ரீவாஞ்சியம் திரு. இராமச்சந்திர அய்யர் மற்றும் திரு. சுவாமிநாத சாஸ்திரிகள் ஆகியோர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

CC-0.TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி அ. பூங்கோதை, M.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன். M.A., B.Lit., M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், ஒளியச்சு மற்றும் கணினி அச்சகப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இசைத்துறை ஆர்வலர்களுக்கும், மாணவர் களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது திண்ணம்.

தஞ்சாவூர்
21.01.2017

ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ:

முகவுரை

सकलकविजनाम्बा सर्वलोकावलम्बा
परिमलनिकुरुम्बा भारभास्वन्नितम्बा ।
विमलवदनबिम्बा विश्वसद्भक्तलम्बा
रमणगुणकदम्बा राजतेशारदाम्बा ॥

ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் மிகமிகச் சிறப்பு வாய்ந்தது இசைக்கலை. தேவர்கள், ஸித்தர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், நந்தி, தும்புரு முதலான வானவர்களும், முனிவர்களும் இசை வல்லுனர்களாகவும், இசையின்பத்தை அனுபவிப்பதையே தங்களது இன்பகரமான பொழுதுபோக்காகவும் அமைத்துக்கொண்டவர்கள். நம் முன்னோர்களும் இசைக்கலையில் மிகத் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்ததுடன் ஸாமகானம் என்று புகழப்படும் இசையினால் தேவர்களை மகிழ்விக்கவும் செய்தார்கள். இராவணேச்வரன் ஸாமகானத்தினால்தான் சிவபெருமானை மகிழ்விக்கச் செய்தான். நாயன்மார்களும், ஆழ்வார்களும் இசைபாடி இறைவனை மகிழ்வித்து நேரிற் கண்டு, வழிபட்டு, இன்புற்று இறுதியில் இறைவனுடன் இரண்டறக்கலந்தார்கள். மாந்தர்களேயன்றி உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும்கூட இசையின்பத்தை அனுபவிப்பவைகளாக இருக்கின்றன. சிறப்பாக பசுக்களும், ஒன்றுமறியா பாலகர்களும், ஸர்ப்பங்களும்கூட இசையின்பத்தை அனுபவிக்கின்றன.

पशुर्वेत्ति शिशुर्वेत्ति वेत्ति गानरसं फणिः ॥ என்பர்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இவ்வாறு சிறப்புவாய்ந்த இவ்விசைக்கலை, குழல், வீணை, மிருதங்கம், தாளம், நாட்டியம் இவைகளுடன் இணைந்ததாக அமைந்திருக்கும் நிலையில் ''ஸங்கீதம்'' என்று வழங்கப்பட்டு, ''மார்க்கம்'' ''தேசீ'' என்ற இருபிரிவுகளைக் கொண்டதாக இருந்தது என்று தெரிகிறது.

गीतं वाद्यं नर्तनञ्च त्रयं संगीतमुच्यते ।
मार्ग देशीविभागेन संगीतं द्विविधं मतम् ॥
महादेवस्य पुरतस्तन्मार्गाख्यं विमुक्तिदं ।
तत्तद्देशगतया रीत्या यस्स्याल्लोकानु रञ्जकम् ॥ सङ्गीतदर्पणः॥

முதன்முதலாக மார்க்கம் என்ற வழியைப் பின்பற்றி இசைபாடுவதற்கு வழிகாட்டியாக இருந்தவர் வால்மீகி முனிவரேயாவர். வால்மீகி முனிவர் தசரத சக்கரவர்த்தியின் திருமஹனான இராமபிரானது சரிதத்தை வாத்யங்களுடன் இணைந்து பாடுவதற்கு ஏற்றவாறு ஸம்ஸ்க்ருத மொழியில் சிறு சிறு பாக்களைக் கொண்டதாக ''இராமாயணம்'' என்னும் நூலை இயற்றினார். அச்சிறப்பு வாய்ந்த காவியம், விளம்பம், மத்யம், துரிதம் என்ற மூன்று காலங்களில்; வீணை, மிருதங்கம் முதலான வாத்யங்களுடன் ஏழுவிதமான ஜாதிகளுடன் அமைந்ததாகவும் இனிமையாகப்பாடுவதற்கும் படிப்பதற்கும் ஏற்றதாகவும் இருந்ததாகத்தெரிகிறது.

पाठ्ये गेयेच मधुरं प्रमाणैस्त्रिभिरन्वितं ।
जातिभिर्सप्तभिर्बद्धं तन्त्रीलय समन्वितम् ॥

இராமாயணம், பாலகாண்டம்,
4வது ஸர்க்கம் 8வது ச்லோகம்.

அவர் இயற்றிய மிகச் சிறப்பு வாய்ந்த ''இராமாயணத்தை'' அவருடைய ஆசிரமத்தில் வளர்ந்துவந்த சீதையின் சிரார்களான லவகுசர்களுக்குக் கற்றுக் கொடுத்து, இசையுடன் நன்கு பாடுமாறும் செய்து

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வைத்தார். ஆச்ரமத்தில் பாடிக்கொண்டிருந்த அச்சிரார்கள் இருவரும் ஒரு சமயம் அயோத்தி சென்று இராமனது அவையில் இராமாயணத்தை 'மார்க்கம்' என்ற வழியைப்பின்பற்றி இனிமையாகப் பாடினார்கள்

तौ तु गन्धर्वतत्वज्ञौ मूर्च्छनास्थानकोविदौ ।
भ्रातरौ स्वरसंपन्नौ गन्धर्वाविव रूपिणौ ॥

இராமாயணம், பாலகாண்டம்,
4வது ஸர்கம் 10வது ச்லோகம்.

ततस्तु तौ रामवचः प्रचोदितौ अगायतां "मार्गविदान" संपदा-

இராமாயணம், பாலகாண்டம்,
4வது ஸர்கம் 31வது ச்லோகம்.

என்ற வரலாற்றை இராமாயணத்திலிருந்து அறிகிறோம்

இராமாயண காலத்திற்குப்பின் 11ம் நூற்றுண்டில் வாழ்ந்துவந்த வங்கதேசப் பெரும்புலவர் 'ஜயதேவர்' என்பார் 'இராதை கிருஷ்ணன்' இவர்களது ச்ருங்கார லீலைகளை வருணித்து தாளக்கட்டுடன் பற்பல இராகங்களில் பாடுவதற்கேற்றவாறு ('பதம்' என்ற அமைப்பில்) 'அஷ்டபதி' என்னும் நூலை இயற்றினார். க்ஷேத்ரக்ஞர் அல்லது க்ஷேத்ரய்யர் என்பார் (A.D. 1633–73) ஜயதேவரைப் பின்பற்றி தெலுங்கு மொழியில் பல பதங்களை இயற்றினர். தீர்த்தநாராயணஸ்வாமிகள் என்பாரும் கிருஷ்ணனைப் பற்றியதாக ஸம்ஸ்க்ருத மொழியில் "தரங்கிணீ" என்ற அமைப்பில் பல பாட்டுக்களை இயற்றினார். புரந்தரதாஸர் என்ற இசைப் பேரறிஞர் இசைக்கலையில் தேர்ச்சிபெறவும் அடிப்படை அறிவைப்பெற்று முறையாகப் பாடுவதற்கும் வழிகாட்டியாக இருந்துகொண்டு, ஸரளிவரிசை, கீதம், வர்ணம், பதம் முதலானவைகளை இயற்றி இசைக் கலைக்கு பெரும்பணியாற்றியுள்ளார். இவ்வாறு ஸங்கீதக்கலை பலவாற்றாலும் முன்னேற்றமடைந்த நிலையில் ஸங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தியாகய்யர் (தியாகப் பிரும்மம்) என்பார், இராக ஸஞ்சாரக்ரமங்களை மனதிற்கொண்டு இராகங்களை பல கோணங்களில் வழுவின்றி பாடுவதற்கும் மார்க்கதரிசியாக இருந்துகொண்டு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பில் பற்பல ராகங்களில் தாளக்கட்டுடன் பாடுவதற்கேற்றவாறு இராம சரிதத்தையும் மற்ற கடவுளர்களையும் துதிசெய்து ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு இவ்விரு மொழிகளிலும் பல்லாயிரக்கணக்கான பாட்டுக்களை இயற்றினர். இவரைப் போன்று முத்துஸ்வாமி தீக்ஷிதரவர்களும், சியாமா சாஸ்த்ரிகளும் பல கடவுளர்களைத் துதித்து ஸம்ஸ்க்ருத மொழியில் ஆயிரக்கணக்கான பாட்டுக்களை இயற்றினர்கள்.

இவ்வாறு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பில் பாடப்பட்ட பாட்டுக்கள் 'கீர்த்தனங்கள்' என்று வழங்கப்பட்டன. இவர்களைப் பின்பற்றி இந்நூலாசிரியரான அம்பி சாஸ்த்ரி என்பாரும் ஸம்ஸ்க்ருத மொழியில் பல கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். இந்நூலாசிரியர் எந்நாட்டவர், எக்காலத்தவர் என்பனவற்றை இவரது பாடல்களில் இருந்து அறியமுடியவில்லையாயினும், இவரது நூலில் 7வது பாட்டில் நடராஜப் பெருமான் - சிவகாமசுந்தரியம்மை இவர்களுடைய சரிதத்தை பாடப்போகிறேன் என்று கூறியிருப்பதால் இவர் சிதம்பரத்தில் வாழ்ந்தவராகவும், சரபோஜி மன்னரது அவைப்புலவராகவும் இருந்திருக்கக்கூடும் என்று ஊகிக்கமுடிகிறது. சரசுவதி மஹால் நூலகத்தில் ஸம்ஸ்க்ருதப் பிரிவில் இசைப் பகுதியில் B.11651 – D.10860 B.11655 - D.10861 என்ற எண்களுடன் கூடியதும் இந்நூலாசிரியர் இயற்றிய கீர்த்தனங்களைக் கொண்டதுமான சுவடிகள் இரண்டனுள் B. 11651 — D. 10860 என்ற எண்களைக் கொண்ட சுவடியை ஆதாரமாகக் கொண்டு 'ஸம்ஸ்க்ருத கீர்த்தனங்கள்' என்ற தலைப்பில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இச்சுவடியில் முதல் 9 பாட்டுக்கள் நான்கு பாதங்களைக் கொண்ட ச்லோக

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

அமைப்பில் உள்ளன. மற்றவைகள் பல்லவி அனுபல்லவி சரணம் என்ற அமைப்பில் கீர்த்தனங்களாக உள்ளன. முதற்பாட்டு விநாயகர் துதியாக அமைந்துள்ள சுலோகம்-

मदावलमुखं वरं महितवैभवं दैवतैः
मदान्धसुरवैरिणां निखिलगर्वनिर्वापणम् ।
जगत्त्रयसमुद्भवप्रचुरविघ्नविध्वंसिनं
शिवत्रयविनायकं शिवसुतं भजे सन्ततम् ॥

இறுதியில் நடராஜப் பெருமானின் துதியாக அமைந்த வரிகள் உள்ள:

यामिनी नायकवदन सोमसभात्वरसदन-२३
रत्नविलसित किरीट नृत्तसुधाकरचूड-२४
ललकासिततनुपार्श्व बलशासननुतसोम-२५
वनजदलायतनेत्र घनसारपाण्डरगात्र-२६
शरणागतजनरक्षाधुरंधर रक्ष-२७

கீர்தனங்களும் உள்ளன.

சுவடியில் அவர் இயற்றியுள்ள கீர்த்தனங்களில் முழுமையாக உள்ளனவற்றைமட்டில் தேர்ந்தெடுத்துத் தொகுத்து இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந் நூலில் ஸ்வரப்படுத்தப்பட்ட கீர்தனங்களின் எண்ணிக்கை 39 ஆகும். இந்நூலாசிரியர் விநாயகர், முருகன், நடராஜப்பெருமான், சிவகாமசுந்தரி, அகிலாண்டேச்வரி, திரிபுரஸுந்தரி இவர்களைப்போற்றி கீர்த்தனங்களை இயற்றியிருப்பினும், சிவகாம சுந்தரி அம்மையையே மிகச் சிறப்புடன் துதி செய்து மிக அதிகமான கீர்த்தனங்களை இயற்றியும், ஒரு கீர்த்தனத்தில் ''கௌரி அம்மையே நான் உன்னையன்றி வேறு எந்த தெய்வத்தையும் உபாஸிக்கிறவனில்லை. நான் பாவங்களை மிக அதிகமாகச் செய்தவனாக இருப்பினும் தயவுசெய்து என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மிகவும் உருக்கமாக முறையிட்டுள்ளார். இதனால் இவர் ஒரு சிறந்த சக்தி உபாஸகர் என்று தோன்றுகிறது. மேலும் இவர் இயற்றியுள்ள கீர்த்தனங்கள் அனைத்தும் சப்தாலங்காரமான அனுப்ராஸங்களுடன் கூடிய சொற்றொடர்களையும், உவமை, உருவகம் போன்ற அர்த்தாலங்காரங்களுடன் கூடிய பல சொற்களைக் கொண்ட ஸமஸ்தபதங்களையும் (தொகைச் சொற்றொடர்) தேவீபாகவதம், ஸௌந்தர்யலஹரீ, மூகபஞ்சசதீ முதலான நூல்களில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை ப்ரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ள பல சொற்றொடர்களையும் மிகவும் அதிகமாகக் கொண்டதாகவும் இருப்பதால், இவர் தேவி பக்தர் என்பதோடல்லாமல் வியாகரண சாஸ்திரம், அலங்காரசாஸ்த்திரம் இவைகளிலும் மிக்க தேர்ச்சிபெற்ற பெரும்புலவர் என்பதுடன் மிகச்சிறந்த இசைப் பேரறிஞர் என்பதையும் அறிந்துகொள்ளமுடிகிறது. எடுத்துக்காட்டாக நேயர்கட்கு ஒருசில சொற்றொடர்கள் இங்கு வழங்கப்பட்டுள்ளன.

जगत्त्रयसमुद्भवप्रचुरविघ्नविध्वंसिनं
शिवत्त्रयविनायकं शिवसुतं भजे सन्ततम् ॥
अम्बरचरार्चित पदाम्बुज महेश
शम्बररिपो परदिगम्बर सुरेश ।
अम्बरशिरोरुह चिदम्बर पुरेश

पाहि नटराज नटराज नटराज ॥ (अनुप्रासालंकारः)
यामिनीनायकवदन-जलजलोचन कुञ्जरगमने- (उपमा)
इन्द्रारिमहीरुहहरणपरशुधारे-नवनीलवारिदबाला-
(रूपकं उपमा)

कल्हारदलनेत्रे - सल्लापजितवल्लकिध्वने-
(सौन्दर्यलहरी)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

पिकपाटवोदितभाषा, शुभकुन्दतरुणप्रसूनरदने-
(मूकपञ्चशती)

वामचम्पकनासे-चण्डमुण्डशैलशतधारपाणिके-
(देविभागवतम्)

घोरमहिषासुरगिरिभेदशतधारपादनीरुहे !! etc. etc.
(देविभागवतम्)

இந்நூலாசிரியர் சில கீர்த்தனங்கட்கே இராகங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவைகளாவன:- நாட்டை, ஸௌராஷ்ட்ரம், கேதாரகௌளம், ஸ்ரீராகம், நாத நாமக்கிரியை, கண்டாரவம், முகாரி, ஆஹிரி, ஸாவேரி, காம்போதி, சிரகுப்தி, கௌளபந்து. இவரால் குறிப் பிடப்படாத இராகங்களையுடைய கீர்த்தனங்கட்கு, அவைகட்கேற்ற இராகங்களும் தாளங்களும் அமைக்கப் பட்டுள்ளன, அவைகளாவன:- தோடி, ஹம்ஸத்வனி, பிலஹரி, ஹமீர்கல்யாணி, தன்யாஸி, ஸாம, புன்னாக வராளி, கேதாரம், கர்ணாடகதேவகாந்தாரி, கீரவாணி, நாடகுறஞ்சி, கமாஸ், சங்கராபரணம், குறஞ்சி, நீலாம்பரி, வஸந்தா, காமவர்த்தினி, வாசஸ் பதியும் ஆகும். இந்நூல் ஸ்வரக்ஞானமுடைய இசைக் கலைஞர்கள் இக்கீர்த்தனங்களை எளிதிற்கற்பதற்கேற்ப இக்கீர்த்தனங்களனைத்தும் ஸ்வரப்படுத்தப்பட்டும், வடமொழியில் பயிற்சியில்லாத கலைஞர்களும் பொரு ளுடன் அறிந்துகொள்வதற்கு ஏற்பவும் கீர்த்தனங்கள் அனைத்தும் தமிழாக்கம் செய்யப்பட்டு பொழிப் புரையுடன் கூடியதாகவும் பதிப்பிக்கப்பட்டிருப்ப தால், இசையில் ஆர்வம் கொண்ட மாந்தர்கள் அனைவரும் இந்நூலைப்பெற்று, கற்று பயன் பெறுவ துடன் தாம் பெற்ற பேரின்பத்தை உலகனைத்துக்கும் அர்ப்பணிப்பார்கள் என்று நம்புவோமாக.

இச்சிறந்த நூல்களைக்கொண்ட சுவடிகளைப் போற்றி ஸரஸ்வதிமஹால் நூலகத்தில் சேமித்துக் காப்பாற்றி யருளிய சரபோஜி மன்னருக்கு முதற்கண் நாங்கள்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

எங்களுடைய க்ருக்ஞதையுடன் கூடிய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூலை பதிப்பிப்பதற்கு எங்களுக்கு ஆணையிட்டு அருளிய தஞ்சை மாவட்டாட்சியரும் சரஸ்வதி மஹால் நூலக டைரக்டருமான உயர்திரு இராமு I.A.S; அவர்கட்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலைப் பதிப்பிப்பதற்கு அவ்வப்போது எங்களுக்கு பலவாற்றாலும் உதவிபுரிந்த சரசுவதிமஹால் நூலக நிர்வாக அதிகாரி பொறுப்பு வகிக்கும் உயர்திரு A. பஞ்சநாதன் M.A., B.Lib. Sc. அவர்கட்கு எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலைப் பதிப்பிப்பதற்குதவிய நூலக பண்டிதர் களுக்கும் நல்ல முறையில் விரைவில் அச்சிட்டுதந்த புதுகை சர்மாஸ் சானடோரியம் அச்சகத்தாருக்கும் எங்களது நன்றி.

ஸ்ரீவாஞ்சியம் S. சுவாமிநாத சாஸ்த்ரி
சிரோமணி

ஸ்ரீவாஞ்சியம் ராமசந்த்ர ஐயர்
சங்கீத வித்வான்

தஞ்சாவூர்
14–4–87

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

श्रीः

॥ संस्कृत कीर्तनानि ॥

(श्री अम्बिशास्त्रिभिः प्रणीतानि)

। हरिः ओं ।

1. विनायकः

(नवरागमणिमालिका)   [रागः तोडी

मदावलमुखं वरं महितवैभवं दैवतैः
मदान्धसुरवैरिणां निखिलगर्वनिर्वापणम् ।
जगत्त्रयसमुद्भवप्रचुरविघ्नविध्वंसिनं
शिवत्रयविनायकं शिवसुतं भजे सन्ततम् ॥ १ ॥

ஹரி: ஓம்

1. விநாயகர் துதி *(ராகம்: தோடி)*

[1]மதாவலமுகம் வரம் மஹிதவைபவம் தைவதை:
மதாந்தஸுரவைரிணாம் நிகிலகர்வநிர்வாபணம் ।
ஜகத்ரயஸமுத்பவப்ரசுரவிக்னவித்வம்ஸினம்
சிவத்ரய[2](சிவப்ரிய) விநாயகம் சிவஸுதம் பஜே
ஸந்ததம் ॥

---

1 *மதாவலமுகம் என்ற இடத்தில் மதாவில முகம் என்றிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது - ஆவிலம் என்பதற்குக் கரைபட்ட என்று பொருள் - மதாவிலம் என்பதற்கு மதஜலத்தினால் கரைபட்ட என்று பொருள் - யானையின் கன்னப் பிரதேசங்களிலிருந்து மதஜலம் பெருகுவது இயற்கை; ஆதலின் ''மதாவிலம்'' — என்பதற்கு மதஜலத்தினால் கரை பட்ட யானை முகத்தோன் என்று பொருள் கொள்ளவேண்டும்.*

2 *சிவப்ரிய விநாயகம் என்று வைத்துக்கொண்டால் சிவனுக்குப் பிரியமான விநாயகன் என்று பொருள் கொள்ளவேண்டும்;*

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இதன்பொருள்: [1]யானைமுகத்தோனும் ச்ரேஷ்டமானவரும் தேவர்களால் போற்றப்பட்ட பேராற்றலையுடையவரும் தேவர்களின் சத்ருக்களும் மிக்க மதங்கொண்டவர்களுமான அஸுரர்களின் கர்வத்தைப் போக்குபவரும் மூவுலகங்களிலுமுள்ளவர்களின் நற்பணிகளின்போது ஏற்படும் இடையூறுகளைக் களைபவரும் சிவனின் மகனுமான சிவத்ரய விநாயகனை (சிவன், பார்வதி, விநாயகன் இவ்வாறு மூவருமாக இருக்கும் நிலையிலுள்ள விநாயகன் என்பது கருத்து) எப்பொழுதும் சேவிக்கிறேன்.

2. षण्मुखः

[राग: हंसध्वनि:

अम्भोजासनवन्दिताङ्घ्रिकमलं जम्भारिसंसेवितम्
दम्भोलिं दृढदानवादिदलने शम्भोस्सुतं षण्मुखम् ।
पार्वत्या वदनाम्बुजाऽहिमकरं भक्तप्रियं भव्यदं
(शूरं) बर्हिणवाहनं सुरगुरुं ध्यायामि चित्ते सदा ॥ २॥

2. ஷண்முகர் துதி *(ராகம்: ஹம்ஸத்வனி)*

அம்போஜாஸனவந்திதாங்க்ரிகமலம் ஜம்பாரிஸம்
ஸேவிதம்
தம்போளிம் த்ருட தாநவாதிதளனே சம்-
போஸ்ஸுதம் ஷண்முகம் ।
பார்வத்யாவதநாம்புஜாஹிமகரம்[1] பக்தப்ரியம் பவ்யதம்
(சூரம்)பர்ஹிணவாஹனம் ஸுரகுரும்
த்யாயாமி சித்தே ஸதா ॥

இதன் பொருள்: பிரமனால் வணங்கப்பட்ட தாமரைமலர் போன்றபாதங்களையுடையவரும், இந்திரனால் வணங்கப்பட்டவரும் மிக்க பலம் பொருந்திய அஸுரர்களை அழிப்பதில் வஜ்ராயுதம் போன்றவரும் சம்புவின் (பரமேச்வரனின்) மகனும் பார்வதியின் முகமாகிற தாமரை மலருக்கு சூரியனைப்போன்றவரும் (தன் மகனை ஷண்முகனைக் கண்டவுடன் சூரியனைக் கண்ட தாமரை

---

1 வதனாம்புஜ-அஹிமகரம் என்று பதம் பிரித்தல் வேண்டும். அஹிமகரன்-சூரியன்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மலர் போல் பார்வதியின் முக கமலம் மலர்கிறது) பக்தர்களிடத்தில் ப்ரியமாக இருப்பவரும், விநயத்தைக் கொடுப்பவரும் மிக்க சரீர பலமுடையவரும் தேவர்கட்கெல்லாம் குருவாக இருப்பவரும் மயிலை வாஹனமாகக் கொண்டவருமான ஷண்முகனை எப்பொழுதும் என்னுடைய சித்தத்தில் தியானம் செய்கிறேன்.

3. नटराजः

[राग: मलहरी

वन्दे हेमसभान्तरस्थितमजं वन्दे सुराणां पतिं
वन्दे नीलगलं शिवं त्रिणयनं वन्देऽहिराट्भूषितम् ।
वन्दे शैलसुताविराजिततनुं वन्दे (जगद्रक्षकम्)
वन्दे विष्णुविधीन्द्रवन्दितपदं वन्दे नटाधीश्वरम् ॥ ३ ॥

3. நடராஜர் துதி *(ராகம்: மலஹரி)*

வந்தே ஹேமஸபாந்தரஸ்திதமஜம் வந்தே ஸுராணாம்-
பதிம்
வந்தே நீலகளம் சிவம் த்ரிணயனம் வந்தே(அ)-
ஹிராட்பூஷிதம் ।
வந்தே சைலஸுதாவிராஜிததனும் வந்தே(ஜகத்ரக்ஷகம்)
வந்தே விஷ்ணுவிதீந்த்ரவந்திதபதம் வந்தே
நடாதீச்வரம் ॥

இ: ள் ; ஸ்வர்ண ஸபையின் மத்தியில் வீற்றிருப்பவரும் பிறவாமல் அநாதிகாலமாக இருப்பவரும்[1] தேவர்கட்கெல்லாம் பதியும் நீலகண்டனும் மங்களஸ்வரூபனும் முக்கண்ணனும் ஸர்பராஜனை ஆபரணமாகக்கொண்டவனும் பர்வதராஜனின் மகளான பார்வதியை தனது சரீரத்தின் ஒருபகுதியில் ஏற்றுக் கொண்டு அர்த்தநாரியாக விளங்குபவனும் உலகரக்ஷகனும் விஷ்ணு, பிரமன், இந்திரன் இவர்களால் வணங்கப்பட்ட திருவடிகளையுடையவருமான நடராஜப்பெருமானை வணங்குகிறேன்.

---

1 ஆதியும் அந்தமும் இல்லாதவன்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

4. शिवकामसुन्दरी

[राग: हमीर्कल्याणी

धम्मिल्लद्युतिनिर्जिताऽसितघना नीलाब्जनेत्रोज्ज्वला
राकाचन्द्रनिभानना (वरगला) कुम्भीन्द्रकुम्भस्तनी ।
(मध्येव्योम) तनूरुहालिजलदा पाथोरुहाङ्घ्रिद्वया
साहित्यं शिवकामिनी वितरताद्वीटीरसेनाऽद्य मे ॥ ४ ॥

4. சிவகாமசுந்தரி துதி (ராகம்: ஹமிர் கல்யாணி)

[1]தம்மில்லத்யுதி நிர்ஜிதா (அ)ஸிதகநா நீலாப்ஜ
நேத்ரோஜ்வலா
ராகாசந்த்ரநிபானனா(வரகளா)கும்பீந்த்ர-கும்பஸ்தநீ ।
(மத்யேவ்யோம)தநூருஹாளிஜலதா பாதோரு-
ஹாங்க்ரித்வயா
ஸாஹித்யம் சிவகாமிநீ விதரதாத் வீடீரஸேநாத்யமே ॥

இ: ள்: நீருண்ட மேகத்தையும் பழித்த முடியப்பட்ட கருங்கூந்தலையுடையவளும் நீலோத்பல மலரைப்போல் ப்ரகாசிக்கின்ற அழகான நீல நிறமுடைய கருவிழிகளையுடைய கண்களால் மிகவும் பிரகாசிக்கின்றவளும் பூர்ணசந்திரனுக்கொப்பான முகத்தையுடையவளும், அழகான குரல்வளையையுடையவளும் மலையின் சிகரம் போன்ற ஸ்தனபாரங்களையுடையவளும், ஆகாசம் போன்ற இடையில் மேகக் கூட்டம் போல் விளங்கும் ரோமாவளியையுடையவளும், தாமரை மலர் போன்று மென்மையான பாதங்களையுடையவளுமான சிவகாமி அம்மை [2]அவளது தாம்பூலம் தரித்து மிக்க ரஸம் பொருந்திய உமிழ்நீரால் ச்ருங்கார

---

1 தம்மில்லத்யுதி—பூக்கள் முத்துக்கள் இவைகளால் அலங்கரிக்கப்பட்டு பின்னிவிடப்பட்ட கூந்தலையுடையவள். அம்பிகையின்கூந்தலின் கருமைக்கு ஒப்பாகாது நீருண்ட மேகத்தின் கருமை நிறம் என்று பொருள்.

2 மூக கவிக்கு அம்பிகை தனது வாயிலிருந்து தாம்பூலரஸம் பொருந்திய உமிழ்நீரை அவரது வாயில் துப்பினதால்தான் அவர் மகாகவியானார் என்று ஒரு வரலாறு; அதை நினைவு கூறுவதுபோல் உள்ளது;

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ரஸம் பொருந்திய ஸாஹித்யத்தை இயற்றுவதற்கு எனக்கருள் புரிவாளாக.

5. त्रिपुरसुन्दरी

[राग: धन्यासी

अहार्यकुलदीपिकां अहरधीशकोटिप्रभां
विहारसदनीभवद्विमलभक्तहृत्पङ्कजाम् ।
सुहासवदनाम्बुजां शुभकृपारसालोकनां
महात्रिपुरसुन्दरीं मनसि भावये शङ्करीम् ॥ ५ ॥

5. த்ரிபுர ஸௌந்தரி துதி (ராகம்: தன்யாஸி)

அஹார்ய குலதீபிகாம் அஹரதீச கோடிப்ரபாம்
விஹாரஸதநீபவத் விமலபக்த ஹ்ருத்பங்கஜாம் ।
ஸுஹாஸவதநாம்புஜாம் சுபக்ருபாரஸாலோகனாம்
மஹாத்ரிபுரஸுந்தரீம் மனஸிபாவயே சங்கரீம் ॥

இ(ள்): பர்வதகுல விளக்காயும் கோடிக் கணக்கான சூரிய மண்டலங்களின் ஒளியைப்போல் ப்ரகாசிப்பவளும், பரிசுத்த மான பக்தர்களின் ஹ்ருதய கமலங்களைத் தனக்கு விஹார (விளையாட்டரங்கு) ஸ்தலமாக அமைத்துக்கொண்டவளும் புன் முறுவலுடன்கூடிய தாமரைமலர்போன்ற முகத்தையுடைய வளும், கருணைபொழியும் அழகான கண்களால் பார்ப்பவளுமான மஹாத்ரிபுர சுந்தரியான சங்கரியை மனதினுல் தியானிக்கிறேன்.

6. बाला

[राग: साम

अरुणाम्बुरुहानना मनोज्ञा
तरुणादित्यसहस्रकोटिशोभा ।
मधुवैरिसुपूजिताङ्घ्रिपद्मा
मधुरां मे कवितां ददातु बाला ॥ ६ ॥

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

6. பாலே என்னும் அம்பாளின் துதி *(ராகம்: சாம)*

அருணாம்புரு ஹானனா மனோஜ்ஞா
[1]தருணாதித்யஸஹஸ்ர கோடி சோபா ।
மதுவைரிஸம்பூஜிதாங்க்ரி பத்மா
மதுராம் மே கவிதாம் ததாது பாலா ॥

இ. ள்.: செந்தாமரைமலர் போன்ற முகத்தையுடையவளும் அழகானவளும் கோடி இளம்சூரியனுக்கு ஒப்பான ப்ரகாசமுடைய வளும், மது வைரியான விஷ்ணுவினால் பூஜிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற பாதங்களையுடையவளுமான பாலாதேவி எனக்கு மதுரமான கவிதா சக்தியை கொடுக்கட்டும்.

7. प्रितज्ञा

[राग: वराली

श्रीमद्व्याघ्रपदस्य पन्नगपतेर्नृत्तस्य सन्दर्शितुः
श्रीमद्धेमसभापतेः त्रिजगतीनाथस्य गौरीशितुः ।
पार्वत्याः करुणानिधेश्च चरितान्येवं प्रवक्ष्येऽधुना
सप्रासानि पदान्यमूनि विविधैर्रागैर्विचित्राण्यहम् ॥७॥

7. நடனஸபேசனின் துதி *(ராகம்: வராளி)*

ஸ்ரீமத் வ்யாக்ரபதஸ்ய பந்நகபதேர் ந்ருத்தஸ்ய ஸந்தர்சிது:
ஸ்ரீமத்ஹேமஸபாபதே: த்ரிஜகதீநாதஸ்ய கௌரீசிது: ।
பார்வத்யா: கருணாநிதேச்ச சரிதாந்யேவம்
ப்ரவக்ஷ்யே஽துநா
ஸப்ராஸாநிபதாந்யமூநிவிவிதைர்
ராகைர்விசித்ராண்யஹம் ॥

---

1 அம்பிகையின் நிறம் மஞ்சள் கலந்த வெண்சிவப்பு. இதை ஒப்பிடுவதற்காக தருண — இளம் வயதுடைய; ஆதித்யன்— சூரியன்; என்னும் பொருளைக்கொண்ட 'தருணாதித்ய' என்ற பதத்தை அமைத்துள்ளார். காலை வேளையில் சூரியன் மஞ்சள் நிறம் கலந்த வெண்சிவப்பாக இருப்பான்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மூவுலகுக்கும் நாதனாயும் கௌரீவல்லபனாயும் இருக்கின்ற ரத்நஸபாபதியான நடராஜப் பெருமானின் நாட்டியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீமத்வ்யாக்ரபாதருடையதும் பதஞ்சலியினுடையதும் கருணாநிதியான பார்வதியினுடையதுமான விசித்ரமான சரித்ரங்களை, பலவித ராகங்களில் அநுப்ராஸமென்னும் சப்தாலங்காரத்துடன்கூடிய பாட்டுக்களை இப்பொழுது இயற்றப் போகிறேன்:

குறிப்பு: இப்பாட்டிலுள்ள பதங்களின் அமைப்புக்கேற்றவாறு பொருள் கூறப்பட்டிருப்பினும், வ்யாக்ரபாதர் என்ற முனிவரும், பதஞ்சலியும் பார்த்துக்கொண்டிருக்க அம்மை பார்வதியுடன்கூட நடனமாடுகின்ற ரத்னசபாபதியினுடைய சரிதத்தையும் பார்வதியின் சரிதத்தையும் அனுப்ராஸத்துடன் கூடியதாகவும் பல ராகங்களில் பாடத்தக்கதாகவும் இயற்றப் போகிறேன் எனக்கொள்ளல் வேண்டும். இப்பாட்டு நடராஜப் பெருமானின் தாண்டவ நிலையை வர்ணிப்பதாக உள்ளது:

8. आत्मप्रशंसा (1)

[राग: केदारम्

अल्पाऽपि वाग्वृत्तिरियं मदीया
लोके भृशं राजति सार्वकालम् ।
श्रीमन्नटेशस्य गुणप्रपञ्च:
यद्वर्ण्यतेऽस्यामपि हैमवत्या: ॥ ८ ॥

8. அவையடக்கம் கூறுதல் । (ராகம்: கேதாரம்)

அல்பாபி வாக்வ்ருத்திரியம் மதீயா
லோகே ப்ருசம் ராஜதி ஸார்வகாலம் ।
ஸ்ரீமந்நடேசஸ்ய குணப்ரபஞ்ச:
யத்வர்ண்யதே(அ)ஸ்யாமபி ஹைமவத்யா: ॥

என்னுடைய இந்த வாக்வ்ருத்தி(கவிதை) மிகவும் குறைவாக இருப்பினும் (கவிதைக் குறிய பதக்கோர்வைகள் அர்த்தபுஷ்ட ரஸபாவங்கள் ஆகியவை குறைவாக இருப்பினும் என்று கொள்ள வேண்டும்) எப்பொழுதும் உலகத்தில் ப்ரகாசிக்கிறது (உலகத்திலுள்ள அனைவராலும் போற்றப்படுகிறது) ஏனெனில் நடேசப்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பெருமானுடையதும் பார்வதியினுடையதுமான குணங்கள் இப் பாக்களில் வர்ணிக்கப்படுகின்றன,

குறிப்பு:- என்னுடைய இக்கவிதை (பாட்டு) மிகவும் ரஸவத்தாக இல்லாதிருப்பினும் நடராஜப்பெருமான் பார்வதி இவர்களுடைய குணங்கள் இப்பாக்களில் வர்ணிக்கப்படுவதால் உலகிலுள்ள மக்களால் எப்பொழுதும் கொண்டாடப்படுகிறது என்பது பொருள். (உலகிலுள்ள மக்களனைவரும் போற்றுவார்கள் என்பது கருத்து)

9. आत्मप्रशंसा (2)

[राग: सुरुटि

तनीयसीमप्यनिशं बुधौघाः
मदीयवाणीमुपलालयन्ति ।
निशम्य (कोह्युल्बणवर्णबन्धां)
स्वबालवाचं न (समाद्रियेत) ॥ ९ ॥

शिवकामसुन्दर्यै नमः ॥

॥ शुभमस्तु ॥

9. அவையடக்கம் 2 (ராகம்: ஸுருடி)

தநீயஸீமப்யநிசம் புதௌகா:
மதீயவாணீமுபலாலயந்தி ।
நிசம்ய(கோஹ்யுல்பணவர்ணபந்தாம்)
ஸ்வபாலவாசம் ந(ஸமாத்ரியேத) ॥

என்னுடைய பாட்டுக்கள் ஸாமான்ய மானவைகளாக இருந்த போதிலும் வித்வான்கள் அவைகளைப் போற்றுகிறார்கள். கொச்சையான சொற்களையுடைய தனது குழந்தையின் பேச்சை எந்தப் பெற்றோர்கள்தான் கேட்கமாட்டார்கள் (கேட்டு ரஸிக்க மாட்டார்கள்) ரஸிப்பார்கள் என்பது பொருள்:

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

1 विनायकः

[राग: नाट्टै

चारणगन्धर्वसुराऽसुरपरिपूज्यपाद ।
नारदसन्नुत भुवनकारणविग्रह भोः ।
घोरसुरारातिजनदारण निर्दय विघ्नं
(वि) दारय कल्पकनामवारणवक्त्र विभो ॥ १ ॥

1. கல்பக விநாயகர் (ராகம்: நாட்டை)

சாரண கந்தர்வஸுராஸுர பரிபூஜ்யபாத !
நாரதஸந்நுத புவனகாரண விக்ரஹ போ:
கோரஸுராராதிஜனதாரண நிர்தயவிக்னம் ||
(வி) தாரய கல்பகநாம வாரணவக்த்ர விபோ ||

சாரணர், கந்தர்வர், தேவர்கள், அஸுரர்கள் இவர்களால் வணங்கப்பட்ட திருவடிகளையுடையவரும் நாரதரால் வணங்கப் பட்டவரும் உலகம் தோன்றுவதற்குக் காரணமானவரும் மிக்க வலிமை பொருந்திய அஸுரர்களைத் தயவின்றி கொன்றவருமான ஹே கல்பக விநாயகனே இடையூறைப் போக்குவீராக.

2. षण्मुखः

सुन्दर षण्मुख गौरीनन्दन पङ्कजभव-
मुकुन्दपुरुहूतसुरबृन्द समीडित भोः ।
सन्ततमाकलितोरु कुन्दधनुश्शर-
शक्तेऽमन्दमिह केकिरथ स्कन्द शुभं कुरु मे ॥ २ ॥

2. ஷண்முகர் (முருகன்)

ஸுந்தர ஷண்முக கௌரீ நந்தன பங்கஜபவ-
முகுந்தபுருஹூத ஸுரப்ருந்த ஸமீடித போ :|

ஸ. கீ.—2

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஸந்ததமாகலிதோரு [1]குந்ததநுச்சர சக்தே
அமந்தமிஹகேகிரத ஸ்கந்த சுபம் குரு மே ||

அழகானவரும், ஆறுமுகங்களையுடையவரும் பரமேச்வரன், பிரமன், விஷ்ணு, இந்திரன் அனைத்துத் தேவர்கள் ஆகிய இவர்களால் புகழப்பட்டவரும், எப்பொழுதும் குந்தம் (முல்லை)(முல்லையரும்பினால் தொடுக்கப்பட்ட மாலை என்று கொள்ளவேண்டும்) வில், அம்பு, சக்தி இவைகளைப் பெற்றிருப்பவரும் மயில் வாகனனுமான ஹே ஸ்கந்தனே எனக்கு மங்களத்தை (க்ஷேமத்தை)ச் செய்வீராக,

3. कनकसभेशः

अनलसुधाकर रविलोचन नगजारमण शिव
सनकसनन्दनविनुत धनदसखेऽखिलद ।
घनकलुषतिमिरविभेदनचतुर रविचरण
मनसि वस नटनपते कनकसभेश्वर मे ॥ ३ ॥

3. நடராஜப் பெருமாள்

அநலஸுதாகர ரவி லோசன நகஜாரமண சிவ
ஸநகஸநந்தனவிநுத தநதஸகே அகிலத ।
கனகலுஷதிமிர விபேதனசதுரரவிசரண
மனஸி வஸ நடநபதே கனகஸபேச்வர மே ||

சூரியன், சந்திரன், நெருப்பு அகிய இம் மூன்றையும் கண்களாக உடையவரும் (முக்கண்ணனும்) பார்வதியின் மணாளனும் க்ஷேமத்தைச் செய்பவனும் ஸநகர், ஸநந்தனர் இவர்களால் வணங்கப்பட்டவரும் குபேரனின் நண்பனும் பக்தர்களுக்கு வேண்டியவற்றை அனைத்தையும் அளிப்பவரும், மிக்க பாவத்தைத் போக்கடிப்பதில் இருளைப் போக்குகிற சூரியனைப் போன்றவரும், நடனபதியுமான ஹே கனகஸபேச்வரனே என்னுடைய மனதில் எப்பொழுதும் வஸிப்பீராக! (மிக்க பாபம் செய்தவர்கள்கூட நடராஜப் பெருமானின் திருவடிகளை

---

[1] அளகேபாலகுந்தாநுவித்தம்-(மேகதூதம்) குந்தம்—முல்லையரும்பு;

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வணங்கினால் சூரியனைக் கண்ட இருள் போல் உடனே பாபங்கள் விலகிவிடும் என்பது கருத்து):

4. शिवकामी

श्यामलतन्वङ्गि शिवे कोमलपादाम्बुरुहे
वाम (करभोरु शुभे), सामजकुम्भकुचे ।
हेमसभाधिपकान्ते, तामरसदलनेत्रे
सोममुखि पाहि, शिवकामिनि मां कृपया ॥ ४ ॥

4. சிவகாமி

ச்யாமளதந்வங்கி சிவே கோமளபாதாம்புருஹே
வாம(கரபோரு சுபே), ஸாமஜகும்பகுசே।
ஹேமஸபாதிபகாந்தே தாமரஸதளநேத்ரே
ஸோமமுகி பாஹி, சிவகாமினி மாம் க்ருபயா ||

கருப்பான மெல்லிய சரீரத்தையுடையவளும், மங்களத்தைச் செய்பவளும், அழகான தாமரை போன்ற இரு பாதங்களையுடையவளும் சுபமானவளும் யானையின் மத்தகத்தைப் போன்ற ஸ்தநங்களையுடையவளும் ரத்நஸபாபதியான நடராஜ பெருமானின் மனைவியும் தாமரை மலர் போன்று அழகான செவ்வரிபடர்ந்த கண்களையுடையவளும் பூர்ண சந்திரனுக் கொப்பான (அழகிய) முகத்தை உடையவளும், சிவனுக்கு மிகவும் விருப்பமானவளுமான சிவகாமி அம்மையே என்னை அருள்பாலித்துக் காப்பாற்ற வேண்டும்.

5. विनायकः

। पल्लवी ।

[राग: कौलम्

पालय गणेशाऽधुना पाशाङ्कुशधराऽ-
दीनफालानलविलोचन पार्वतीमुखाम्बुजेन । (पालय)

(इन: சூரியன்)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

। अ-पल्लवि ।

कुन्दसमानैकदन्त कुम्भजपूज्य निरन्त
(कुञ्जराङ्गाऽऽनन्दकन्द सन्नुतामरेशबृन्द) । (पालय)

सामजाधीश्वरवक्त्र सोमशेखर त्रिणेत्र
हेमसभाधीशपुत्र हेरम्बाऽमरेशमित्र । (पालय)

शिवत्रयविनायक शिवमतिविधायक
भवपयोधितारक पाहि विघ्नविनायक । (पालय)

5. விநாயகர்

பல்லவி

பாலய கணேச அதுநா பாசாங்குசதரா(அ)தீந-
பாலாநல விலோசன பார்வதீமுகாம்புஜ இந (பாலய)

அநுபல்லவி

குந்தஸமானைகதந்த கும்பஜபூஜ்ய நிரந்த
(குஞ்சராங்க ஆநந்தகந்த ஸந்நுதாமரேசப்ருந்த) (பாலய)

சரணம்

1: ஸாமஜா தீச்வா வக்த்ர ஸோமசேகர த்ரிணேத்ர
ஹேமஸபாதீசபுத்ர ஹேரம்பாமரேசமித்ர (பாலய)

2. சிவத்ரயவிநாயக சிவமதிவிதாயக
பவபயோதிதாரக பாஹிதவிக்நவிநாயக (பாலகணேச)

பாசம், அங்குசம் இவைகளைப் பெற்றிருப்பவரும் மிகவும் பலம் வாய்ந்தவரும் அக்னியை நெற்றிக் கண்ணாக உடையவரும், பார்வதியின் முகமாகிற தாமரை மலருக்கு சூரியனைப் போன்றவருமான (மகனான விநாயகனைக் கண்டதும் பார்வதியின் முகம் மலருகிறது என்பது பொருள்) ஏ கணேசனே இப்பொழுது என்னைக் காப்பாற்றும்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

குந்த மலர் போல் வெண்மையான ஒரு தந்தத்தையுடையவரும் அகத்தியரால் பூஜிக்கப்பட்டவரும்– (யானையினுடையது போன்று அழகான பிடரியையுடையவரும் ஆநந்த ஸ்வரூபரும் இந்திரனால் வணங்கப்பட்டவருமான ஏ கணேசனே (இப்பொழுது என்னைக் காப்பாற்றும்.)

யானைகட்கெல்லாம் தலைவனான யானை அரசனின் முகத்தையுடையவனும் சந்திர கலையை முடியில் உடையவனும் முக்கண்ணனும் ரத்நஸபாதியான நடராஜப் பெருமானின் மகனும் இந்திரனுக்கு நண்பனாகவுமிருக்கின்ற ஹேரம்ப கணபதியே (இப்பொழுது என்னைக் காப்பாற்றும்).

பக்தர்களுக்கு நல்ல அறிவை அளிப்பவரும் ஸம்ஸாரஸாகரத்திலிருந்து (அடியார்களை) கரையேற்றுபவரும், இடையூறுகட்கெல்லாம் தலைவனாகவும் இருக்கிற சிவத்ரய விநாயகனாகிய கணேசனே இப்பொழுது என்னைக் காப்பாற்றும்.

6. पळनिक्षेत्ताण्डवः

[राग:–सौराष्ट्रम्

। पल्लवि ।

अवतु मामिह अवतु मामिह
भवपयोनिधिपरिगतं भृशकातरं
भवतनूभवभवुक(भविक)दायक
तव दयानयनाम्बुजम् । (अवतु)

। अ-पल्लवि ।

अघविमोचन (मखविभेदन-
सखसुपूजित) सुन्दर सुखद
सूकर शिखरि शोभित शिखरवत्स दयानिधे (अवतु)

। चरणम् ।

जलजसंभव जलजलोचन(बलपरा(त्या)दिसुरार्चित)
फलविदायक खलजनाहित फलपुरीश परात्पर (अवतु)

CC-0.Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

शुभ षडानन विहगवाहन(दहनदेहसमुद्भव)
जहि ममाहितं अहिविभूषण महि(ही)धराधिपजासुत
(अवतु)

6. பழனியாண்டவர் *(ராகம்: ஸௌராஷ்ட்ரம்)*

பல்லவி

1. அவது மாமிஹ அவது மாமிஹ
பவபயோநிதிபரிகதம் ப்ருசகாதரம்
பவதநூபவ பவுக(பவிக)தாயக தவ தயாநயநாம்புஜம்
(அவது)

2. அகவிமோசன (மகவிபேதநஸக ஸுபூஜித)
ஸுந்தர ஸுகத
ஸுகெரசிகரிசோபித சிகர, வத்ஸ, தயாநிதே. (அவது)

3. ஜலஜஸம்பவ ஜலஜலோசன (பலத்யாதிஸுரார்சித)
பலவிதாயக கலஜநாஹித பலபுரீச பராத்பர (அவது)

4. சுப ஷடானன விஹகவாஹன (தஹனதேஹ ஸமுத்பவ)
ஜஹி மமாஹிதம் அஹிவிபூஷண ம(ஹீ) தராதிபஜா
ஸுத (அவது)

1. பவன் என்றும் பரமேச்வரனின் மகனும் க்ஷேமத்தைக் கொடுப்பவனுமான ஷண்முக ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கிக் கிடப்பவனும் மிகவும் பயந்து கிடக்கின்ற என்னை உம்முடைய தாமரை போன்று சிவந்த செவ்வரிபடர்ந்த கண்கள் காப்பாற்றட்டும்:

2. பாபத்தைப் போக்கடிப்பவனும் பரமேச்வரனின் ஸகாவான குபேரனால் பூஜிக்கப்பட்டவனும் அழகானவனும் ஸுகத்தை கொடுப்பவனும் பன்றிமலையில் (பழனிமலையில்) விளங்கும் மலையோனே குழந்தாய் தயாநிதியான ஷண்முகனே தயையுடன் கூடிய உமது நயனாம்புஜங்கள் என்னைக் காப்பாற்றட்டும்:

3. தாமரைமலரில் தோன்றியவனும் தாமரைமலரைப் போன்று அழகான கண்களையுடையவனும் இந்திரன் முதலான தேவர்களால் பூஜிக்கப்பட்டவனும் அடியார்கட்கு நற்பயனை அளிப்பவனும் துஷ்டர்களை சிக்ஷிப்பவனும் பரத்துக்கும் அப்பாற்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பட்டவனுமான ஹே பழனியாண்டவனே தயையுடன் கூடிய உமது நயனாம்புஜங்கள் என்னைக் காப்பாற்றட்டும்.

4. சுபமானவனும், ஆறுமுகங்களையுடையவனும், மயில் வாஹனனும் அக்னியில் தோன்றியவனும் ஸர்ப்பங்களை ஆபரணங்களாக உடையவனும், பார்வதியின் மகனுமான ஆறுமுகனே எனக்கேற்பட்டிருக்கும் கஷ்டங்களை உமது தாமரை மலர் போன்ற கண்கள் நீக்கட்டும்.

7. स्वामिनाथः

[रागः—केदारगौलम्]

पालय षडाननेश सुशीलसन्नुतचरण
त्रिभुवनकारण क्रौञ्चविदारण (पालय)

स्कन्द दानववृन्दभञ्जन (सुरासुराखिलदायक)
धृतशर नायक वल्लीसुनायक (पालय)

मारकोटिसमान गौरीकुमार कुक्कुटकेतन
(तारकदत्तमयूरासन) (पालय)

स्वामिशैलनिवास ते पदं नौमि शङ्करबालक
भृतमणिजालक (जगदधिपालक) (पालय)

7. [ஸ்வாமிமலை ஸ்வாமிநாதன்] *(ராகம்: கேதார கௌளம்)*

1. பாலய ஷடானனேச ஸுசீலஸந்நுதசரண
த்ரிபுவனகாரண க்ரௌஞ்சவிதாரண (பாலய)

2. ஸ்கந்த தானவப்ருந்தபஞ்ஜன (ஸுராஸுராகிலதாயக)
த்ருதசர நாயக வல்லீஸுநாயக (பாலய)

3. மாரகோடிஸமான கௌரீகுமார குக்குடகேதன
(தாரகதத்த மயூராஸந) (பாலய)

4. ஸ்வாமிசைல நிவாஸ தே பதம் நௌமி சங்கரபாலக
ப்ருதமணிஜாலக (ஜகததிபாலக) (பாலய)

CC-0.TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

1 நல்லொழுக்கமுடையவர்களால் (பக்தர்களால்) வணங்கப்பட்ட இரு திருவடிகளையுடையவனும், மூவுலகும் (தோன்றுவதற்குக்) காரணனாக இருப்பவனும் க்ரௌஞ்ச மலையைப் பிளந்தவனுமான ஆறுமுகதேவனே காப்பாற்றும்.

2 அரக்கர் கூட்டமனைத்தையும் அழித்தவனும் தேவர்கள் (தன்னை வணங்குகிற) அஸுரர்கள் அனைவருக்கும் அவர்கள் விரும்பிய யாவற்றையும் அளிப்பவனும், அம்பைப் பெற்றிருப்பவனும் (தேவர்களுக்கெல்லாம்) நாயகனும் வல்லீ மணாளனுமான ஸ்கந்தனே (என்னைக் காப்பாற்றும்).

3 கோடி மன்மதனுக் கொப்பான அழகுடையவனும் கௌரியின் மகனும், சேவற்கொடியோனும், தாரகாசுரனால் அளிக்கப்பட்ட மயிலை வாஹனமாகக் கொண்டவனுமான ஸ்கந்தனே என்னைக் காப்பாற்றும். (தேவஸேநாபதியான ஸ்கந்தன் தாரகாஸுரனைப் போரில் வென்றதும் அவன் முருகனுக்குத் தன்னை மயிலாக ஆக்கிக் கொண்டு அவருக்கு ஆஸனமாக அர்ப்பணித்துக் கொண்டான் என்பது புராண வரலாறு).

4 உருத்திராக்ஷ மணிமாலைகளை அணிந்திருப்பவரும் உலகரக்ஷகனும் சங்கரனின் திருமகனுமான ஸ்வாமிமலையில் வீற்றிருக்கும் ஸ்கந்தனே உமது திருவடிகளை வணங்குகிறேன்; என்னைக் காப்பாற்றும்.

8. षण्मुखः

[राग:—श्रीरागम्

धीर षण्मुख मञ्जुहार(हास)कुमार
तारकासुरमदवार(भार)भञ्जन शूर धीर
(दारितक्रौञ्चसानो, वारित सैन्य)मण्डलान्धकार
भेदचण्डभानो
भूतरोगखण्डनेश्वर अण्डजेशपुरीमध्य(मण्डलेश्वर)
(लोल कुण्डल युगल)शोभि गण्डमण्डल पां त्राहि
(धीर)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

स्कन्द बालिका (वल्ली) प्रियनन्दन बर्हिणवाह
सन्ततं मुनीन्द्र-
(वन्दितपाद द्वन्द्व) चापबाणशक्तिचन्द्रहास
मुख्यशस्त्रबृन्द-
भासुरकरारविन्द सुन्दर—मां त्राहि (धीर)

(पुरुषोत्तमादिदेवबृन्दवन्दितपाद) तरुण देवयानेश
करुणाम्बुनिधे परुषभवाम्भोराशिपरिगते मयि कृपां
(निधेहि वैद्यनाथसूनो) गुरुनायक—मां त्राहि (धीर)

8. முருகன் *(ராகம்: ஸ்ரீராகம்)*

1. தீர ஷண்முக மஞ்சுஹார (ஹாஸ) குமரா
தாரகாஸுர மதவார (பார) பஞ்ஜன தூர தீர
(தாரிதக்ரௌஞ்சஸாநோ, வாரித ஸைந்ய)
மண்டலாந்தகார பேதசண்டபாநோ

2. பூதரோககண்டனேச்வர அண்டஜேசபுரீ மத்ய
(மண்டலேச்வர)
(லோலகுண்டலயுகள) சோபிகண்டமண்டல-
மாம்த்ராஹி (தீர)

3. ஸ்கந்த பாலிகா (வல்லீ) ப்ரியநந்தன பர்ஹிணவாஹ-
ஸந்ததம்
முநீந்த்ரவந்திதபாதத்வந்த்வ-சாபபாணசக்தி
சந்த்ரஹாஸ-
முக்யசஸ்த்ரப்ருந்த பாஸுரகராரவிந்த-ஸுந்தர—
மாம்த்ராஹி (தீர)

4. (புருஷோத்தமாதிதேவப்ருந்தவந்திதபாத)
தருணதேவயாநேச
கருணாம்புநிதே - பருஷ பவாம்போராசி பரிகதே மயி
க்ருபாம்
(நிதேஹிவைத்யநாதஸூநோ) குரு நாயக-மாம் த்ராஹி-
தீர.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

1 புன்முறுவல் பூத்த முகத்தோனும் (அழகான மாலையை யுடையவனும்) தருணவயதுடையவனும், தாரகாஸுரனுகிற மதயானையைக் கொன்றவனும், சூரனும் தீரனுமான ஆறுமுகனே (என்னைக் காப்பாற்றும்):

2) க்ரௌஞ்ச மலையைப் பிளந்தவனும், (அஸுர) ஸைந்ய மண்டலங்களை அழித்தவனும், (அஞ்ஞானமாகிற) இருளைப் போக்குவதில் சூரியனைப் போன்றவனும் பூதப்ரேதபிசாசுகளினுல் ஏற்படுகிற ரோகங்களைப் போக்குபவனும் அண்டஜேச புரியின் மத்ய (மாயூரத்தைத் தலைமை இடமாகக் கொண்ட ஊர்களுக்கு நடுவில் விளங்கும் வைத்தீச்வரன் கோவில்) மண்டல நாயகனும் அசைகின்ற இருகுண்டலங்களையுடைய காதுகளால் அழகாக விளங்குகின்ற தோள்வளைகளையுடையவனுமான ஆறுமுகனே (என்னைக் காப்பாற்றும்).

3 இளம் வயதுடைய வல்லியை மனைவியாக உடையவனும் (வல்லி மணாளனும்) மயில் வாஹனனும் எப்பொழுதும் முனி ச்ரேஷ்டர்களால் வணங்கப்பட்ட இரு பாதங்களையுடையவனும், தாமரை போன்ற அழகான கைகளில் வில், அம்பு, சக்தி, சந்திர ஹாஸம் முதலான ஆயுதங்களைப்பெற்று ப்ரகாசிக்கின்றவனும், அழகானவனுமான ஸ்கந்தனே தீரனே (என்னைக் காப்பாற்றும்):

4 புருஷோத்தமன் முதலான தேவர் குழாமினுல் வணங்கப் பட்ட திருவடிகளையுடையவனும், இளம் வயதுடைய தைவயானையின் மணாளனும், கருணைக் கடலும், வைத்யநாதனின் மைந்தனும் குருக்ரஹத்திற்கு நாயகனுகவும் விளங்குகின்ற, தீரனே ஆறுமுகனே கொடிய ஸம்ஸாரஸாகரத்தில் உழலுகின்ற என்னைக் காப்பாற்றும்:

குறிப்பு: சுப்பிரமண்யரை அதிதேவதையாகக் கொண்டது செவ்வாய்கிரஹம்தான் ஆனுல் ச்லோகத்தில்—''குரு நாயக'' என்று கூறப்பட்டிருப்பதால் குருக்ரஹத்திற்கு என்று பொருள் கூறப்பட்டிருக்கின்றது:

9. बाला देवि - शिवकामसुन्दरी

वण्णक्कुळिप्पु [राग: नाट्टकुरिञ्जि

। पल्लवि ।

बाले मरतकनीलेऽरुणरुचिचेले जननविभञ्जने
बालेन्दुतिशुभफाले जगदनुकूले कुरु मम भावुकम् । (बाले)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

। चरणम् ।

दारुणे (यमभटवारणे) गतिजितवारणे कनकविभूषणे
प्रारणे (प्राङ्गणे) मणिशुभतोरणे त्रिभुवनकारणे
कमलदलेक्षणे ।

(निलिम्पकरिकटनितम्बिनि) जनकदम्बपूजितवैभवे
मदम्ब सुन्दरनितम्बशोभिनि चिदम्बरेश्वरवल्लभे ।

भामिनि हे शिवकामिनि सज्जनकामितदानविचक्षणे
त्वामिह देवि नमामि सुकेशिनि मामिह पाहि दयानिधे

வண்ணக்குறிப்பு

9. மஹாத்ரிபுர ஸுந்தரியின் அங்க தேவதையான பாலாதேவி

1. பாலே மரதகநீலே (அ)ருணாருசி சேலே ஜனன
விபஞ்ஜநே
பாலேந்துவதி சுப பாலே ஜகதநுகூலே குரு மம பாவுகம்!
பாலே- (பல்லவி)

2. தாருணே (யமபடவாரணே) கதிஜித வாரணே கனக
விபூஷணே
ப்ராரணே (ப்ராங்கணே) மணிசுப தோரணே
த்ரிபுவனகாரணே
கமலதளேக்ஷணே: (பாலே)

3. [1](நிலிம்பகரிகட நிதம்பினி) ஜனகதம்பபூஜிதவைபவே.
மதம்ப ஸுந்தரநிதம்ப சோபினி சிதம்பரேச்வர வல்லபே.
(பாலே)

---

[1] நிலிம்ப என்னும் சொல், அரசர், தேவர், என்ற பொருளில் கூறப்பட்டிருக்கிறது. இங்கு யானை அரசன் என்பதற்கு பதிலாக ஐராவதம் எனப் பொருள் கூறப்பட்டிருக்கிறது; கண்டாரவம் என்ற 12வது பாட்டில், ''வரநிலிம்பகாமினீ'' என்ற வரிக்கு மற்றெல்லா தேவர்களைக் காட்டிலும் உயர்ந்தவரான பரமேச்வரனை விரும்புகிறவள் என்றும் பொருள் கூறப்பட்டிருக்கிறது;

CC-0.TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

4. பாமினி ஹேசிவகாமினி ஸஜ்ஜநகாமிததான விசக்ஷணே
த்வாமிஹ ... விநமாமி ஸுகேசினி மாமிஹ பாஹி
தயாநிதே- (பாலே)

1 இளம்வயதினளும் மரகதம்போல் நீல நிறமானவளும் சிவப்பு நிறமுள்ள ஆடையை உடுத்தியிருப்பவளும் மறு பிறவியைப் போக்குபவளும், (மோக்ஷத்தைஅளிப்பவளும்) பிறை நுதலினால் மிகவும் அழகாக விளங்கும் நெற்றியையுடையவளும் உலகம் அனைத்துக்கும் நன்மையைப் பயப்பவளுமான ஹே பாலே எனக்கருள் புரிவாயாக.

2 பயங்கரமான யமபடர்களை விரட்டுவதில் மத்தகஜம் போன்றவளும், மத்தகஜத்தினதுபோன்ற நடையையுடையவளே கனகமயமான ஆபரணங்களையுடையவளும், மணிகளாலான அழகிய தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்திலமர்ந் திருப்பவளும், மூவுலகிற்கும் காரணமானவளும் தாமரை மலர் போன்ற அழகான கண்களையுடையவளுமான ஹேபாலே எனக்கு அருள் புரிவாயாக.

3 ஐராவதத்தின் மத்தகம்போன்று பருத்தப்ருஷ்ட பாகங்களை யுடையவளும், திரளான ஜனங்களால் பூஜிக்கப்பட்ட (போற்றப் பட்ட) வைபவத்தையுடையவளும் அழகான நிதம்பங்களால் (ப்ருஷ்டபாகங்களினுல்) மிகவும் அழகாக இருப்பவளும், சிதம்பரேசனான நடராஜப் பெருமானின் ப்ரிய நாயகியுமான என் தாயே பாலே எனக்கருள் புரிவாயாக.

4 ஸஜ்ஜனங்களுக்கு அவரவர் வேண்டிய வரன்களை யளிப்பவளும், அழகிய கூந்தலையுடையவளும் தயாநிதியும், மிகவும் பிரகாசிக்கின்றவளுமான ஹே சிவகாமிதேவி அம்மையே உன்னை வணங்குகிறேன் என்னைக் காப்பாற்றுவாயாக.

10. शिवकामसुन्दरी

राग: शङ्कराभरणम्

। पल्लवि ।

शङ्करि शशिशेखरे शङ्करि तव पादनीरजे देहि भक्तिम् ।
पङ्कजभवनुते भवुकवारिधे शङ्करि ।

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

(इन्द्रारिमहीरुहहरणपरशुधारे) चन्द्राननमहसा
बहुलशोभिते यात्राकृते सरोजदलनिभपदयुगे
मन्त्रापूरितदेहे महनीयमूर्ते शंकरि ।

चण्डाभिधानदितितनूजसंहारिणि दण्डायुधाचलदमन
दम्भोले कुंडलीश्वरमुख्यमुनिजनवन्दिते
खण्डपरशुकान्ते कम्बु कन्धरे (शङ्करि)

सल्लापजितपिकवल्लकिध्वने देवि उल्लासिदयापाङ्गे
दुरितनायके कल्हारदलनेत्रे कांक्षितवरं देहि
तिल्लाटवीशे शिवकामसुन्दरि शङ्करि शशिशेखरे

10 சிவகாமசுந்தரி

1. சங்கரி சசி சேகரே சங்கரி தவ பாத நீரஜே தேஹி பக்திம்
பங்கஜ பவநுதே பவுக வாரிதே சங்கரி. (பல்லவி)

2. (இந்த்ராரி மஹீருஹ ஹரண பரசுதாரே) சந்த்ரானன
மஹஸா பகுள சோபிதே
யாத்ரா க்ருதே ஸரோஜ தள நிபபதயுகே மந்த்ராபூரித
தேஹே
மஹனீயமூர்தே - சங்கரி

3. சண்டாபிதான திதிதநுஜ ஸம்ஹாரிணி தண்டாயுதா
சலதமன
தம்போளே குண்டலீச்வர முக்ய முனிஜனவந்திதே-
கண்டபரசு காந்தே கம்புகந்தரே - சங்கரி-

4. ஸல்லாபஜிதபிகவல்லகித்வனே தேவி உல்லாஸி
தயாபாங்கே
துரிதநாயிகே கல்ஹாரதள நேத்ரே காங்க்ஷித வரம்
தேஹி.
தில்லாடவீசே சிவகாமஸுந்தரி சங்கரி சசிசேகரே-
சங்கரி.

1 சந்திரகலையை தலையிலணிந்திருப்பவளும் பிரமனால் வணங்கப்பட்டவளும் க்ஷேமவாரிதியுமான சங்கரி உனது பாத கமலங்களில் பக்தி ஏற்படும் வண்ணம் எனக்கு அருள்புரிவாயாக

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

2 (உனது) மதிமுகத்தின் காந்தியினால் மிகவும் அழகாக விளங்குபவளும், இந்திரனின் வைரிகளாம் அரக்கர்களாகிய பெரிய மரங்களை வெட்டுவதற்கென்றே கோடரியைப் பெற்றிருப்பவளும் தாமரை மலர் போன்று மென்மையான திருவடிகளையுடையவளும் மந்திரமயமான சரிரத்தையுடையவளும்(மந்த்ரஸ்வரூபமானவள்) மிக்க அழகு பொருந்தியவளுமான சங்கரி அருள்புரிவாயாக.

3 சண்டன் என்று சொல்லப்படுகிற திதியின் மைந்தனை ஸம்ஹாரம் செய்தவளும் தண்டாயுதமலை (பழனியாண்டவன் வீற்றிருக்கும் மலை) யின் வளர்ச்சியைக் குறைப்பதில் வஜ்ராயுதம் போன்றவளே குண்டலீச்வரன் (பதஞ்சலி) முதலான முனி ஜனங்களால் வணங்கப்பட்டவளும் கண்ட பரசுவான பரமேச்வரனின் நாயகியும் சங்கு போன்று மூன்று கோடுகளையுடைய அழகான கழுத்தையுடையவளுமான சங்கரி அருள்புரிவாயாக

4 குயில், வீணை இவைகளின் ஒலியைவிட இனிமையாகப் பேசுபவளும் (அம்மையின் குறல் ஒலி குயில், வீணை இவைகளின் ஒலியவிட இனிமையாக இருக்கும் என்பது கருத்து) தன்னை அலங்கரித்துக்கொள்வதில் மிக்க விருப்பமுடையவளும் கருணை பொழியும் கடைக்கண் பார்வையையுடைவளும் இடையூறுகட்கெல்லாம் தலைவியும் (இடையூறுகளைக் களைவதில் சிறந்தவள்) செங்கழுநீர் மலர் போன்று அழகான கண்களையுடையவளும் தில்லைநகரில் விளங்குபவளுமான ஏ! சிவகாமிசுந்தரி, சங்கரி, உனது தாமரை மலர் போன்ற திருவடிகளில் என்னுடைய மனது ஈடுபடும் வண்ணம் பக்தியை அருள்பாலித்து நான் விரும்பிய வரன்களையும் அளிப்பாயாக.

11. शिवकामसुन्दरि

[राग:—नादनामक्रिया

पल्लवि

कालारिकान्ता पातु मां, सततमनुकूला सती सुवागुमा ।
शैलाधिपति शुभबाला कराभिधृतलीलाशुका या
शिवकामसुन्दरी सा गौरी (कालारि)

वामा वारिजलोचना वदनजितसोमा सुखदा शोभना
कामारिदत्ततनुवामाऽमरारिजनभीमा
पयोजभवपूजितपादाम्बुजाता (कालारि)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

धीरा दुरितहारिणी परिलसितघोराऽसिखेटधारिणी
हाराभिरामकुचभारा भवा निगमसारावली
सकललोकदयापरी गौरी (कलारि)

शरशोभिपाणिका रुचिरकचभरवञ्चितबलाहका
शरणागतार्तिहारिचरणारविन्दा चिदम्बरनायकीशा
परमानन्दस्वरूपा देवी (कालारि)

11. சிவகாம சுந்தரீ

நாத நாமக்ரியை

1. காலாரி காந்தா பாது மாம் ஸததமனுகூலா ஸதி ஸுவாக் உமா-
   சைலாதிபதி சுபபாலா கராபித்ருத லீலாசுகா யா-
   சிவகாமஸுந்தரீ ஸா கௌரீ காலாரி - (பல்லவி)

2. வாமா வாரிஜலோசனு வதனஜித ஸோமா ஸுகதா சோபனா
   காமாரிதத்த தநுவாமா(அ)மராரிஜன பீமா பயோஜபவ
   பூஜிதபாதாம்புஜா (காலாரி)

3. தீரா துரிதஹாரிணீ பரிலஸித கோராऽஸி கேடதாரிணீ
   ஹாராபிராமகுச பாரா பவா நிகம ஸாராவளீ ஸகல லோக
   தயாபரீ கௌரீ- (காலாரி)

4. சரசோபிபாணிகா ருசிரகச பரவஞ்சித பலாஹகா
   சரணுகதார்த்தி ஹாரி சரணாரவிந்தா சிதம்பர நாயகீசா
   பரமானந்தஸ்வரூபா தேவீ- (காலாரீ)

இயமனை ஸம்ஹாரம் செய்த பரமசிவனின் மனைவியும், இமவானின் அழகான குழந்தையும், விளையாடுவதற்காக கையில் வைத்துக்கொள்ளப்பட்ட கிளியையுடையவளும், அழகாகப் பேசுபவளும் உமை, கௌரி என்றழைக்கப்படுபவளான சிவகாம சுந்தரி எப்பொழுதும் நான் ஈடுபடுகின்ற காரியங்களனைத்திலும் எனக்கு அனுகூலையாக இருந்து கொண்டு என்னைக் காப்பாற்றட்டும்.

CC-0.TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

2. தாமரை மலர் போன்று அழகான கண்களையுடையவளும் சந்திரனைக் காட்டிலும் மிக்க அழகுடைய முகத்தையுடையவளும், பரமேச்வரனால் அளிக்கப்பட்ட அவனது சரீரத்தின் இடது பாகத்தையடைந்து அர்த்தநாரியாக விளங்குபவளும் அஸுரர்களை வெல்பவளும், பிரமனால் பூஜிக்கப்பட்ட தாமரை மலர் போன்று அழகான திருவடிகளையுடையவளும், அழகாக இருப்பவளும், க்ஷேமத்தையும்ஸுகத்தையும் கொடுப்பவளுமான உமையாகிய கௌரி எப்பொழுதும் எனக்கனுகூலயாக இருந்து கொண்டு என்னைக் காப்பாற்றட்டும்.

3. ப்ரகாசிக்கின்ற பயங்கரமான கத்தியையும், கேடயத்தை உடையவளும் தான் அணிந்து கொண்டிருக்கிற முக்தா ஹாரத்தினால் மிகவும் அழகாக விளங்கும் ஸ்தன பாரங்களை யுடையவளும், வேதத்தின் மெய்ப் பொருளும் உலகமனைத்தையும் தயை கூர்ந்து காப்பவளும் இடையூறுகளைப் போக்குபவளும், மிக்க தைரியம் உடையவளுமான (உமையாகிற கௌரி என்னைக் காப்பாற்றட்டும்.)

4. வில்லேந்திய கையையுடையவளும், கார்மேகத்தையும் பழிக்கும் வண்ணம் மிகக் கரிய கூந்தலையுடையவளும், சரணடைந்தவர்களைக் காப்பவளும் பரமானந்த ஸ்வரூபிணியும் சிதம்பர நாயகியுமான (உமைகௌரி என்னைக் காப்பாற்றட்டும்.)

12. शिवकामसुन्दरी

[राग:– घण्टारव:

कदम्बविपिननिवासे वरनिलिम्पकामिनि कदम्बविनुते
मदम्ब शोभनरूपे परचिदम्बरेश्वरकामिनि बाले ।

शङ्करि शङ्करि गौरी(रि)शिवशङ्करि
गौरी(रि)जयशिवशङ्करि गौरि ।

कुम्भभवेडितपादे दैत्यदम्भविभञ्जने जम्भारिवन्द्ये
शुम्भदनूद्भवनाशे शातकुम्भघटपीनतुङ्गकुचाढ्ये
(शङ्करि)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

कुन्दसमानशुभदन्ते देवि मन्दहासजितचन्द्रमयूखे
सुन्दर वारिजनेत्रे शुभचन्दनकुङ्कुमशोभितगात्रि
(शङ्करि)

कुण्डलभासुरकर्णे मणिमण्डलमौक्तिकमञ्जुकिरीटे
चण्डसुरेश्वरवैरि परिखण्डननिर्भरपेशलबाहो
(शङ्करि)

कोमलपङ्कजपादे नवसोमसाधारणवामललाटे
हेमसभान्तरवासे शिवकामसुन्दरि मां पाहि कृपाब्धे
(शङ्करि)

12. சிவகாமசுந்தரி

கண்டாரவம்

1. கதம்பவிபின நிவாஸே வர நிலிம்ப காமினி கதம்பவிநுதே
மதம்ப சோபனரூபே பரசிதம்பரேச்வரகாமினி- பாலே
சங்கரி சங்கரி கௌரிசிவசங்கரி கௌரி
ஜய சிவசங்கரி கௌரி- சங்கரி

2. கும்பபவேடிதபாதே தைத்யதம்பவிபஞ்ஜனே ஜம்பாரி வந்த்யே
சும்பதநூத்பவ நாசே சாதகும்பகடபீனதுங்ககுசாட்யே
சங்கரி

3. குந்தஸமான சுபதந்தே தேவி மந்தஹாஸஜித சந்த்ரமயூகே
ஸுந்தர வாரிஜநேத்ரே சுபசந்தன குங்கும சோபித காத்ரி. சங்கரி

4. குண்டலபாஸுரகர்ணே மணிமண்டல மௌக்திக மஞ்ஜுகிரீடே
சண்டஸுரேச்வரவைரி பரிகண்டன நிர்பரபேசல பாஹோ (சங்கரி)

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

5. கோமளபங்கஜபாதே நவஸோம ஸாதாரண வாமலலாடே
ஹேமஸபாந்தரவாஸே சிவகாமஸுந்தரி மாம் பாஹி க்ருபாப்தே: (சங்கரி)

இ: ள்: கடம்பு மரங்கள் நிறைந்த வனத்தில் வசிப்பவளும் மற்றெல்லாதேவர்களைக் காட்டிலும் உயர்ந்த தேவனை (பரமேச்வரனை) விரும்புகிறவளும் கதம்ப மலரை பாணமாகக் கொண்ட மன்மதனால் வணங்கப்பட்டவளும், மிக்க அழகுடையவளும் சிதம்பர நாதனான நடராஜனின் அன்புநாயகியும் அகத்தியனாலும் இந்திரனாலும் வணங்கப்பட்டவளும், அஸுரர்களை வெல்பவளும், சும்பனின் மகனைக் கொன்றவளும், ஸ்வர்ணகுடம் போன்று பருத்த ஸ்தனங்களையுடையவளும் முல்லையரும்பு போன்று அழகான பல் வரிசைகளையுடையவளும் சந்திரனின் கிரணங்களைக் காட்டிலும் அதிகமாகப் பிரகாசிக்கிற அழகான மந்தஹாஸத்துடன் கூடிய முகத்தையுடையவளும், தாமரை மலர் போன்று அழகான கண்களையுடையவளும் சந்தனத்தையும் குங்குமத்தையும் உடலிலும் நெற்றியிலும் பெற்றிருப்பதால் மிகவும் அழகாக இருப்பவளும், காதுகளில் குண்டலங்களையும், மாணிக்கம் முத்து இவைகளால் ஆக்கப்பெற்ற அழகான கிரீடத்தையுடையவளும் சண்டாசுரனை வென்றவளும் தாமரை மலர் போன்ற திருவடிகளையுடையவளும், பிறைநுதலாளும் ரத்ன சபையில் வீற்றிருப்பவளுமான ஹே கௌரி, சங்கரி, சிவகாமசுந்தரி, கருணாமூர்த்தே என்னைக் காப்பாற்று.

13. शिवकामसुन्दरि

[राग: देवगान्धारी

हेमललाक्षि(टि)कालसत्फाले मत्तसामजगमने गानलोले
कामदानकामधेनुशीले शिवकामसुन्दरि मां पाहि बाले ।

पुण्डरीकपुरान्तरवासे रत्नकुण्डलयुगले शुभनासे
चण्डमुण्डमथनानायासे शिवकामसुन्दरि

नीरजाक्षि निखिलकल्याणि चारुसाररसने
शङ्करि शर्वाणि कीराभयकरे मञ्जुवाणि शिवकामसुन्दरि

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

भक्तजनहृदयावस्थाने देवि चित्तमधिवस मेऽसमाने
नृत्तराजवामभागलीने शिवकामसुन्दरि मां पाहि बाले ।

13. சிவகாமசுந்தரி *(ராகம்: தேவகாந்தாரி)*

1. ஹேமலலாடிகாலஸத்பாலே மத்த ஸாமஜகமனே
கானலோலே
காமதான காமதேனுசீலே சிவகாமஸுந்தரி மாம் பாஹி
பாலே

2. புண்டரீக பூராந்தரவாஸே ரத்னகுண்டலயுகளே
சுபநாஸே
சண்டமுண்ட மதநாசநாயாஸே. (பாலே)

3. நீரஜாக்ஷி நிகிலகல்யாணி சாருஸாரரஸநே சங்கரி
சர்வாணி
சங்கரி சர்வாணி கீராபயகரே மஞ்ஜுவாணி - சிவ

4. பக்தஜன ஹ்ருதயாவஸ்தானே தேவி சித்தமதிவஸ மே
அஸமானே
ந்ருத்தராஜவாமபாக லீனே சிவகாமஸுந்தரி-மாம் பாஹி
பாலே

13: ஸ்வர்ணம்போல் ப்ரகாசிக்கிற நெற்றியையுடையவளும் மதங்கொண்ட யானைபோல் அழகாக அசைந்தசைந்து நடப்பவளும், ஸங்கீதத்தை விரும்புவபளும், விரும்பியவரன்களை யளிப்பதில் காமதேனுவுக்கொப்பானவளும், புண்டரீக புரத்தில் வஸிப்பவளும், காதுகளில் ரத்ன குண்டலங்களை அணிந்திருப்பவளும், அழகான மூக்கையுடையவளும் அநாயாஸமாக சண்டாசுரனையும், முண்டாசுரனையும் ஸம்ஹாரம் செய்தவளும் தாமரை மலர் போன்ற கண்களையுடையவளும், அழகானதும் சாரமுள்ளது மானவைகளை ரஸிப்பவளும் கிள்ளைக்கபயமளித்தவளும், இனிமையாகப் பேசுபவளும் பக்தர்களின் ஹ்ருதயத்தில் வஸிப்பவளும் மிக மஹிமைவாய்ந்தவளும் நடராஜப்பெருமானின் இடதுபக்கத்தில் விளங்கும் அழகே வடிவெடுத்தாற்போன்ற சரீரத்தையுடைய ஹேசிவகாமசுந்தரி என்மனதை விட்டகலாமல் இருந்துகொண்டு என்னைக் காப்பாற்றுவாயாக.

CC-0.TSarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

14. शिवकामसुन्दरी

राग : कुरञ्जि

बाले शिवकामि पाहि
कटिशोभिदुकूले कौतुकं मे देहि
कुचोपमितशैले मानसं ममैहि, धृतसोमे शिववामे
दैत्यभीमे बाले

पाकशासनाभिवन्द्ये प्रतिदिवसं लोकरक्षणाभिनन्द्ये
शङ्करि मम शोकादिनि योगिचिन्त्ये कुन्ददन्ते देवि निरन्ते
आनन्दकन्दे बाले ।

ताण्डवेशनाट्यसाक्षि भवानि पुण्डरीकदृग्वामाक्षि
नमितजनषण्डसादरकटाक्षि चारुहारे
कनककोटीरे गौरि गम्भीरे बाले

14. சிவகாமசுந்தரி (ராகம்: குரஞ்ஜி)

பாலே சிவகாமி பாஹி-கடிசோபிதுகூளே கௌதுகம்
மே தேஹி.
குசோபமிதசைலே மானஸம் மமைஹி த்ருதஸோமே
சிவ வாமே தைத்யபீமே பாலே

பாகசாஸனபிவந்த்யே ப்ரதிதிவஸம் லோகரக்ஷணபிநந்த்யே
சங்கரி மம சோகாதிநி யோகிசிந்த்யே குந்ததந்தே தேவி
நிரந்தே ஆனந்தகந்தே பாலே।

தாண்டவேசநாட்யஸாக்ஷி பவாநி புண்டரீகத்ருக்வாமாக்ஷி
நமிதஜனஷண்டஸாதர கடாக்ஷி சாருஹாரே
கநககோடீரே கௌரி கம்பீரே பாலே ।

இ, ள் : ஹே பாலே சிவகாமி நீ பட்டாடையை உடுத்தியிருப்பதால் மிகவும் அழகாக விளங்குகிறாய் (மேலும்) மலைகளை ஒத்த கொங்கைகளையுடையவளாகவும் கனகமயமான கிரீடத்துடனும்; பிறை நுதலுடனும் பரமேச்வரனின் இடது பாகத்தையடைந்தவளாகவும் இருக்கிறாய், உன்னைக்காண அஸுரர்கள்

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

